2017 ஜூலை 3]

சம்பந்தமாகவும், மற்றொன்று சுற்றுச் சுவர் அமைத்துத் தருவது சம்பந்தமாகவும் இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

முற்பகல் 11-15

2. தகவல் கோரல்

தடை செய்யப்பட்ட பான் மற்றும் குட்கா போன்ற பொருள்கள் விற்பனை-விசாரணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டிருக்கிற குட்கா, பான் மசாலா போன்றவற்றை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நீங்களும் இந்த அவையில் எழுப்பி, நிறைய விவாதம் செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மறுபடியும் அதையே பேசினால் எப்படி? அதையெல்லாம் அனுமதிக்க முடியாது. நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே விவாதித்துவிட்டோம். (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன சொல்வதாக இருந்தாலும் சரி. அந்தப் பொருள் குறித்து ஏற்கெனவே விவாதம் இந்த அவையிலே நடந்து முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் ஓர் அறிக்கை கொடுத்துவிட்டார். (குறுக்கீடுகள்) நீங்கள் திரும்பத் திரும்ப, அதையே (குறுக்கீடுகள்) அதிலே ஒன்றும் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, அதிலே எதுவும் விஷயம் இல்லை. (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே அதை அனுமதித்துவிட்டேன். எதிர்க்கட்சித் தலைவரையும், உங்களையும் அனுமதித்து அது விவாதிக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்)*

[பேரவைத் தலைவர்] [2017 ஜூலை 3

விவாதிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையும் கொடுத்துவிட்டார். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப நீங்கள் அதையே பேசி அவையின் நேரத்தை—(குறுக்கீடுகள்) நான் அதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று எனக்கும் ஓரளவுக்குப் புரிகிறது. (குறுக்கீடுகள்) அதையேதான் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் அதை அனுமதிக்க முடியாது என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) வேறு subject-ஆக இருந்தால் நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) முதலமைச்சர் (குறுக்கீடுகள்) விசாரணையில் இருந்து, விசாரணையின் முடிவில் ஏதாவது தெரிந்தால்தான் அதைப்பற்றி நீங்கள், என்ன, ஏது என்று (குறுக்கீடுகள்) அதன்மேல் நடவடிக்கை எடுத்தால் கேட்கலாம். இன்னும் விசாரணையில் இருக்கிறது. ஆகவே அதையெல்லாம் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அதையெல்லாம் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் raise செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் வேறு ஏதாவது எழுப்புவதாக இருந்தால் நான் அனுமதிக்கிறேன். இது ஏற்கெனவே விவாதிக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) இந்த அவையில் எதிர்க்கட்சித் தலைவரும், துணைத் தலைவரும் இரண்டு நாட்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பி அது குறித்து விவாதித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். பதில் சொன்ன பிறகும் நீங்கள் திரும்பவும் அதையே கேட்டுக்கொண்டிருந்தால் அவையினுடைய நேரம் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். வேறென்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) வேறென்னவென்று சொல்லுங்கள். நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) அனுமதிக்கிற விஷயமாக இருந்தால்தான் அனுமதிப்பேன். அனுமதிக்க இயலாத விஷயமாக இருந்தால் நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் வேறு ஏதாவது விஷயம் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பான், குட்கா பற்றி எல்லாம் விசாரணையில் இருக்கிறது. அது பற்றி ஏனென்று கேட்டால்**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதையேதான் சொல்ல வருகிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை இதெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் இந்த ஒரே பொருள் குறித்து (குறுக்கீடுகள்) இந்த அவையில் ஒரே பொருள் குறித்து எத்தனை முறை விவாதிக்க முடியும்? (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இதுமாதிரி எல்லாம் பேசக்கூடாது. அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் பிடிவாதமாக இந்த மாதிரி ஏற்கெனவே விவாதித்த பொருளையே விவாதிக்க அனுமதி கேட்பது முறையில்லை. நான் அதை அனுமதிக்கமாட்டேன். வேறு பொருள் குறித்து ஏதாவது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்றால் நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) இதையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே விவாதித்து, முதலமைச்சர் அவர்கள் அறிக்கை அளித்துவிட்டார். (குறுக்கீடுகள்) சொல்லிவிட்டேன். நீங்கள் திரும்பவும் அதற்கே போகிறீர்கள், அதெப்படி? (குறுக்கீடுகள்) அது விசாரணையில்தான் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) விசாரணையில் இருக்கிற பொருள் குறித்து (குறுக்கீடுகள்) முதலமைச்சர் விசாரணையில் இருக்கிறது என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) அதுகுறித்து நீங்கள் எதற்கு பேசுறீர்கள்? (குறுக்கீடுகள்) அது அரசினுடைய முடிவு. (குறுக்கீடுகள்) விசாரணையில் இருக்கும்போது, விசாரணையின் முடிவு வராமல் (குறுக்கீடுகள்) அதைப்பற்றி எப்படி முடிவெடுக்க முடியும்? (குறுக்கீடுகள்) அதைப் பற்றித்தான் நீங்கள் (குறுக்கீடுகள்) அதைப் பற்றித்தான் நீங்கள் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், உட்காருங்கள். சிறிது ஒத்துழையுங்கள். அது முடியாது, வேறேதாவது (குறுக்கீடுகள்) பேச அனுமதிப்பது என்றால், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேலு, முதலில் நீங்கள் உங்கள் இடத்திலேயே இல்லை. (குறுக்கீடுகள்) உங்கள் இடத்தில் இல்லாமல் இங்கே வந்து பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) மைக்கில் பேசுவதில்லை. எதையும் சாதாரணமாகக்கூட பேசக் கூடாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2017 ஜூலை 3

முற்பகல் 11-20

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் குட்கா சம்பந்தமான பிரச்சினை பற்றி அவையில் எழுப்புவதற்கு தாங்கள் அனுமதி மறுக்கிற காரணத்தால் இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம். (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. முஹம்மது அபூபக்கர், திரு. தமிமுன் அன்சாரி, நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்புக்கு வராது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

கதிராமங்கலத்தில் இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்தின் ஆழ்துளைக் கிணறு குழாய்களில் ஏற்பட்டுள்ள எண்ணெய்க் கசிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. கதிராமங்கலத்தில் இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தின் ஆழ்துளைக் கிணறு குழாய்களில் ஏற்பட்டுள்ள எண்ணெய்க் கசிவு குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள், முனைவர் கோவி. செழியன், திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு. துரை. சந்திரசேகரன், திரு. எம். இராமச்சந்திரன் ஆகியோரும், காங்கிரஸ் கட்சியின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கரி. இராமசாமி, திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோரும் குறித்து பேரவை விதி 56 மற்றும் 55-ன்கீழ் அறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். இதனை நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்பு கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

*****முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கதிராமங்கலத்தில் ஓ.என்.ஜி.சி.*